விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 11 ரபி-அவ். 2 இதழ் 284
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-11-84

# படகும், ஆயுதங்களும் மட்டக்களப்பு பொலிஸில்

(மட்டக்களப்பு நிருபர் இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு வாகரைக் கடல் சல்லித்தீவில் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகளுடன் கைப்பற்றப்பட்ட நீல நிற பிளாஸ்ரிக் இயந்திரப் படகும், ஆயுதங்களும் நேற்று முன்தினம் அதிகாலை பாதுகாப்புப் படையினரால் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டன,

விமானப் படையினரால் ஆகாயத்திருலிருந்து சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று தீவிரவாதிகளின் சடலங்களும் இனம்காணப்படாத நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் போது கைதுசெய்யப்பட்ட நபர் பொலிஸ் உயர்மட்டப்பிரிவால் விசாரணைசெய்யப்பட்டு வருகிறுர்,

கைப்பற்றப்பட்ட இயந்திரப்படகில் அதிசக்தி வாய்ந்த மூன்று அவுட் போட் மோட்டர் இயந்திரங்கள் பூட்டப்பட்டிருந்தன. படகுக்குள் இரத்தக்கறைகள் காணப்பட்டன.

கைப்பற்றப்பட்ட படகிலிருந்து 9 'எஸ். எல். ஆர்' துப்பாக்கிகளும், துப்பாக்கி முனையில் பொருத்தப்படும் ஊசிகளும். இரண்டு தோல்

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

★ "பலமுறை மறுத்துவிட்டோம்; இலங்கை மீண்டும் குற்றம் சுமத்துகிறது!

# தீவிரவாதிகள் முகாமும் இல்லை இந்தியாவின் ஆதரவுமில்லை!"

## பிரதமர் 'பிரேமா' கூற்றுக்கு இந்திய உயர்அதிகாரி மறுப்பு

(புதுடில்லி)

**இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் எதுவும் தமிழ் நாட்டில் இல்லையென இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரியொருவர் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ்த்தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை ஒழித்துவிடுமாறு இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்குவிடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அந்த அதிகாரி இவ்வாறு கூறினுர்.

இலங்கைத் தமிழ்த்தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை என முன்பும் பல தடவைகள் மறுத்துவிட்ட போதிலும் இலங்கை மீண்டும் மீண்டும் குற்றம் சுமத்துவதாகவும் இந்திய வெளி

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## ஊரடங்குசட்ட நேரத்தில் இளைஞர் சுடப்பட்டார்!

### கந்தர்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று பிற்பகல் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானுர்.

அச்சுவேலியைச் சேர்ந்த துரைசிவம் (29 வயது) என்ற இந்த இளைஞர் நேற்று ஊரடங்குச் சட்ட நேரத்தில் கந்தர் மடம் பலாலி வீதியில்

[5-ம் பக்கம் 4-கலம் பார்க்க)

★ ஊர் அடங்கிய நேரத்தில்

## இயக்கத்தைக் கூறி கொள்ளை முயற்சி!

(கல்வியங்காடு)

ஊரடங்குச் சட்டநேரத்தில் இயக்கத்தின் பெயரால் ஒருவர் வீட்டில் கொள்ளையடிக்கச் சென்றவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்!

மாகியப்பிட்டியைச் சேர்ந்த முன்னுள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வீட்டில் ''இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்'' என்று கூறி, எட்டு இனந்தெரியாத நபர்கள் வீட்டினுள் சென்று பொலிஸ் உத்தியோகத்தரை

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## ஊரடங்கு நேரத்தில் மாற்றமில்லை

(கொழும்பு)

ஊரடங்குச்சட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நேற்று மாலை 4 மணியிலிருந்து இன்று அதிகாலை 7 மணி வரை நீடிக்கும்.

மன்னுர், வவனியா மாவட்டங்களில் நேற்றுமாலை 6 மணியிலிருந்து இன்று காலை 7 மணி வரை இது அமுலில் இருக்கும்.

''இம்மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரும் வரை ஊரடங்குச் சட்டம் இதே நேரங்களில் தொடர்ந்து அமுலில் இருக்கும்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சின் செயலாளர் திரு சிறிவர்த்தஞ தெரிவித்துள்ளார்.

## சுவரொட்டி மூலம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு தாங்களும் (தமிழீழ விடுதலைப் புலிகள்) உரிமை கோருவதாகத் தெரிவித்ததற்கு மறுப்புத் தெரிவித்து 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் யாழ் குடா நாடெங்கும் காணப்படுகின்றன.

நீலமையினுல் எழுதப்பட்டுள்ள இச் சுவரொட்டிகளில் சிவப்புமையினுலான 'புலித் தலைச் சின்னம்' பொறிக்கப்பட்டுள்ளது.

(6ம் பக்கம் 4ம்கலம் பார்க்க)

VIP EXPRESS

பலரின் நீண்டநாள் வேண்டுகோளுக்கிணங்க – ஒருவழிக்கட்டணம் ரூபா '75/- ஆக குறைக்கப்பட்டு –

கொழும்பு / யாழ். துரித இரவு—பகல் பஸ் சேவை

- ★ சலுகை கட்டணம்
- ★ சொகுசான ஆசனங்கள்
- ★ தொலைக்காட்சி (T V) பொழுது போக்கு
- ★ பண்பாடுள்ள ஊழியரின் கனிவான சேவை

ஆசனப்பதிவு:

(1) றேயல் பார்மசி
156, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(2) சியாமளா
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(3) றேயல் பார்பசி விற்பனை நிலையம்
624, பருத்தித்துறை வீதி,
நல்லூர். 868

## வவனியாவில் மற்றுமொரு 'மரண தண்டனை'

(வவனியா)

வவனியாவில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வீதியில் கிடக்கக் காணப்பட்டது.

சடலத்தின் அருக அவரது மரணத்துக்கு உரிமைகோரி பிரசுரம் ஒன்றும் காணப்பட்டது அதில் 'சமூக விரோதி' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

வவனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த தாமோதரம் பிள்ளை மனேகரன் என்ற இந்த இளைஞரை நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டிலிருந்து 4 இனந்தெரியாத இளைஞர்கள் அழைத்துச் சென்றதாகவும் நேற்றுக்காலை இறந்துகிடக்க் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### நுவரேலியா பொலிஸ் நிலைய பாதுகாப்பு

(கொழும்பு)

நுவரேலியாப் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு நேற்று முதல் பலப்படுத்தப் பட்டுள்ளது

நுவரேலியாவில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படுகிறது

## உபதபால் நிலையத்தில் தொலைபேசி கொள்ளை

(மாவிட்டபுரம்)

பூட்டப்பட்டிருந்த மாவிட்டபுரம் உப தபால் நிலையம் உடைக்கப்பட்டு அங்குள்ள தொலைபேசி மற்றும் 9 இணைப்புள்ள தொலைபேசி 'சுவிச்போர்ட்' 2 பற்றிகள் ஆகியன கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

இனந்தெரியாத 3 இளைஞர்கள் இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சைக்கிள்களில் வந்த 3 இளைஞர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு உபதால் அலுவலகத்துக்கு முன்னுல் நின்ற ஒருவரின் மோட்டார் சைக்கிளைக் கடத்திச் சென்றதாகவும், ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளை உரியவரிடம் கொண்டு வந்து ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது, (மா)

# விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம்புதிய 7·5 ஜன்மார் ஜெனறேற்றர் விற்பனைக்குண்டு. காலை 9-00 மணி - மாலை 5-00 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: முகாமையாளர் யாழ். தனியார் வைத்தியசாலைகள், 395 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ·30

## தேவை

லேத்மன் [Lathemen] வேலைக்கு உடனடியாக வெற்றிடங்கள் உண்டு. அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். இதற்குமுன் வேலை செய்த அத்தாட்சிப் பத்திரம். சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கப்படும் என்றவிபரங்கள் முதல் கடிதத்திலேயே தெரியப்படுத்தவும். எவர்சில்வர் இன்டஸ்றீஸ் லிமிட் யூனிற் 5,6 கைத்தொழில்பேட்டை அச்சுவேலி. 859

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, பிரதான வீதி, 333-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி நடேசன் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்துக்கள் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 578

திருகோணமலை, பிரதான வீதி, 333-ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கந்தசாமி நடேசன் கைம்பெண் செல்வம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

எனவே அக்கறையுள்ள எவரேனும் 1984ம்-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ஆம் திகதி காலை 9 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன்முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணமேதுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கா. மகேந்திரராசா,
பதிவாளர்.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் நாள்
847

## வாடகைக்கு

மானிப்பாய் சந்தையில் பிரதான வீதியில் உள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: சி சிவலிங்கம் சிவசுந்தரி ஸ்ரோஸ், No. 2, மத்திய சந்தை, மானிப்பாய். 849

## சேவை

குறிக்கப்பட்ட தொகைகளில் புத்தகங்கள் வாங்குபவர்களிற்கு அழகிய நயினை நாகபூசனி அம்மனின் படம் உட்பட பல மூவர்ண படங்கள் இலவசம். அன்புஜீ புத்தக நிலையம், 248/9 கே. கே. எஸ். வீதி, யாழ்நகர். 867

## மின்சாரம் தாக்கி பலியானுர்

[பண்டத்தரிப்பு]

மின் கம்பம் ஒன்றில் திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி அறிவு மயங்கிய நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பண்டத்தரிப்பு உப அலுவலகத்தைச் சேர்ந்த மின் ஊழியரான எஸ். சிவகுருநாதன் அங்கு மரணமானுர். தெல்லிப்பழையைச் சேர்ந்த இவர் கடந்த மூன்று மாதகாலமாக யாழ். அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் மின்சாரப் பகுதியில் வேலைபார்த்து வந்தார். கடந்த திங்கட்கிழமையன்று இவர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் மின் கம்பம் ஒன்றில் ஏறித் திருத்தவேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மின்சாரத் தாக்குதலுக்குள்ளானுர்.

## பம்பாயில் 25 பேர் பலி!

(பம்பாய்)

பம்பாயில் நேற்று முன்தினம் நடந்த ரயில் விபத்தில் 25 பேர் பலியானுர்கள். மற்றும் 75 பிரயாணிகள் பலத்த காயமடைந்தனர். (க)

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, தபாற் கந்தோர் வீதி, 125-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவசம்பு சச்சிதானந்தம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 577

திருகோணமலை, தபாற் கந்தோர் வீதி, 125ஆம்இலக்கத்தைச் சேர்ந்த சச்சிதானந்தம் கைம்பெண் இராசயோகினி, —மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே அக்கறையுள்ள எவரேனும் 1985-ஆம் ஆண்டு தை மாதம் 11-ஆம் திகதி காலை 9 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணமேதுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கா. மகேந்திரராசா,
பதிவாளர்

1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ஆம் நாள். 846

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

முகம்மது றஸ்மின்



முகம்மது றஜப்ஜிப்ரியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் முகம்மது றஸ்மின் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (26-11-84) தனது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடுகிறுர். இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நல்வாழ்வுவாழ இருகரமேந்திப் பிராத்திப்பவர்கள் அன்புப் பெற்றோர், அப்பாமார், உம்மும்மாமார், மாமாமார், சவூதி மாமா, மாமிமார், கணடி மாமா மாமகுடும்பத்தினர், மச்சான்மார் மச்சிமார் பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாமார், சாச்சிமார், காக்காமார் தாத்தாமார், மற்றும் உற்றுர், உறவினர், ஏக அல்லாவின் அருள் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றுர்கள்.

(858)

மக்கள் வங்கி வாகனங்கள் விற்பதற்கான

## கேள்விப்பத்திரம்

கீழே குறிக்கப்பட்ட வாகனங்கள் (உழவு இயந்திரம்) விற்பதற்கான சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் மக்கள்வங்கி, யாழ்ப்பாணம் பிரதேச முகாமையாளரால் 14-12-1984 மாலை 4-00 மணி வரை கோரப்படுகின்றன.

பார்வையிட விரும்புவோர் அந்தந்த மக்கள் வங்கிக் கிளை முகாமையாளரின் முன் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்களை மீளப்பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/ஐ வங்கி அலுவல் நேரங்களில் கிளை முகாமையாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

சித்திபெறும் கேள்விப்பத்திரகாரர் ஒரு கிழமை தவணைக்குள் முழு விற்பனைப் பணத்தையும் செலுத்தி வங்கி வளவிலிருந்து வாகனத்தை அகற்றுதல் வேண்டும். தவறின் வைப்புப் பணம் ரூபா 250/-ஐ இழக்க நேரிடும்

இக்கேள்விப்பத்திரம் சம்பந்தமான எந்த முடிவும் பிரதேச முகாமையாளருக்கே உரித்தாகும்.

போட் உழவு இயந்திரம் இல 36 ஸ்ரீ 6009
— பரந்தன் கிளை

போட் உழவு இயந்திரம் இல 36 ஸ்ரீ 5047
— முல்லைத்தீவுக் கிளை

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.

(757)

## 12-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி சாந்தி

தோற்றம்: 5-3-1967 மறைவு: 29-11-1973

இன்றைய திதியில் எங்கள் மகளின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணு, தம்பி.
சுண்டிக்குளி 21/2, விதானையார் லேன்,
யாழ்ப்பாணம். (866)

கனடா, ஸ்பெயின். பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

UNIQUE COMMUNICATION SERVICE

## யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1.1 மகாத்மா காந்தி ரோட்,
(சலூசலவுக்கு அண்மையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ. 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ் - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

### மணி வாக்கு

கெட்டவன் அறிவாளியானாலும் வெறுக்கப்படுகிறான். நாகபாம்பு நாகரத்தினம்உடையதாயினும் அஞ்சப்படுகிறது.

— 'அமர நீதிகள்'

## நமது நோக்கு

### சித்திரம் பேசேல்

அமைதிக்குப்பேர்போன இந்த நாடு இன்று போர்க்களமாக மாறிவருவதை பகுத்தறிவுடைய மனிதன் எவனும் விரும்பான்.

பகுத்தறிவு என்று நாம் அடைகொடுப்பது அவசியமாகின்றது. எத்தனை வருடங்களாக இந்த உள்நாட்டுப் 'போர்' நடைபெறுகின்றது. எத்தனை உயிர்கள், உடைமை, அரசாங்க, தனியார் சொத்து நாசமாய்ப் போய்க்கொண்டிருக்கின்றன? இதற்கு உடனடி முற்றுப்புள்ளி வைக்க மக்கள் கொதித்தெழவில்லை. இனக்கலவரத்தை நாம் கருதவில்லை.

எனவே இந்தப் 'போரில்' யார் வெற்றிபெறுவார் என்று பந்தயம் பிடிப்பவரும், இதனை நிறுத்துவதால் எந்தப் பக்கத்துக்கு, எவருக்கு நயநட்டம் என்று கணக்குப் போடுபவரும் பகுத்தறிவுடையவர் என்று நாம் கொள்வதற்கில்லை. இது சித்திரப்பேச்சில் சிந்தனை இழந்துநிற்கும் கூட்டம்.

தெல்லிப்பழை சம்பவத்தில் உயிரிழந்த கேணல் ஆரியப்பெருமாவின் வாழ்க்கை நய வரலாற்றைப் பத்திரிகையில் படித்தவர்கள், கண்ணீர் வடிப்பர் உண்மையில் இந்த நாட்டின் ராணுவத்துக்கு தலைமைதாங்கும் தளபதியாக மலரும் தகைமையுடையவரென்பது அதில் தெளிவாகிறது.

அவரும் அவருடைய சகாக்களும் உயிரிழந்தது எதற்காக? இந்த அடிப்படைக் கேள்வியை மக்கள் ஆழமாக ஆராய முன்வரவில்லை. 'பயங்கரவாதம்' என்ற பதத்தில் பகுத்தறிவைப் பறிகொடுத்துவிட்டனர்.

இன்னொரு வகையில் இதனை நாம் சொல்லுவோமானால், இந்த நாடு போருக்குப் புதிதானது; இதன் கடந்தகால வரலாறும், இன்றைய வெளிநாட்டுக் கொள்கையும், இதனைப் பாதுகாக்க மட்டுக்கும் மிஞ்சிய படை [தரை, கடல் ஆகாயம்] தேவைப்படுவதில்லை; இருப்பினும் இலங்கை இராணுவம் என்ற மதிப்புடைய படை ஒன்று தேவையானதால் அதன் திறமை இன்று இரண்டுபட்டு ஒன்றுக்கொன்று மோதி . ஒரு குடும்பச் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கொல்லும் அழிவுப்பாதையில் விரயமாகின்றது

குரூர சாவகச்சேரித் தாக்குதலில் உயிரிழந்த அனைவருக்கும் எமது அஞ்சலி; அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபம்; இப்பகுதியில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு இது ஒரு பிராயச்சித்தமா?

இச்சம்பவம் ஒரு திட்டமிட்ட போரின் அம்சமாகலாம். எமக்கு முக்கியமானது என்னவெனில் கடந்தகாலத்திலும் இன்றுவரைக்கும் தமிழ் மக்களின் அபாயநிலையை அரசு உணரவில்லையென்பதே.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்க்க எத்தனிக்கும் பயங்கரவாதிகளை அரசு ஒழிக்கத் திட்டமிட்டது.

அத்திட்டம் இன்று என்ன நிலையில் இருக்கின்றது? ''சிங்கள-தமிழ்'' போராக மாறும் வாய்ப்பும் கிட்டவில்லை

சாவகச்சேரிச் சம்பவம் நாட்டைப் பொறுத்தளவில் ஒரு மிகப் பயங்கரமான சம்பவம்; அரசுக்கு மட்டுமல்ல.

பாராளுமன்றத்தில் இந்த நிலைமையிலுங்கூட, நாடு முழுவதுமே ஊரடங்கு கட்டளையிடுமளவுக்குப்பாரதூரமான செயல் என்று கருதப்பட்டபோதும் எதிர்க்கட்சித் தலைவர் என்ன பேசுகின்றார்?

''பாதுகாப்பு வலயத்துக்கு என்னாச்சு? தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தாம் வளர்த்த புலியின் வாலைப்பிடித்த ஆபத்து நிலையில் இருக்கின்றனர்.'' அரசையும் முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவரையும் அவருடைய சகாக்களையும் ஒரு வெடியில் வீழ்த்துகின்றார். சித்திரப் பேச்சுப்பயில்வான் அனுரா பண்டாரநாயக்கா.

ஆரும் சட்டத்திருத்தம் அநுராவுக்கே பதவி உயர்வு அளித்திருக்கிறது. அதன் விளைவு; இவ்வித பேச்சு

அரசின் பாதுகாப்புவலயம் பற்றி அதிகம் பேசுபவர், மக்கள் பந்தோபஸ்து அமைச்சர். தாம் செய்யப் போகும் எந்தத் திட்டத்தையும் அது அநுகூலமாவதன் முன் பறைசாற்றுவதால் அதுஅநேகமாக நிறைவேறுவதில்லை என்பதை அவர் உணர்வது அவசியமாகிறது.

'போர் நிறுத்தம்' [Cease-fire] ஒன்றே இன்று மக்கள் தேவைப்படுவது. 'ஊரடங்கு' தக்க நேரத்தில் திடமாகச் செயற்படுத்தி நாட்டைக் கலவரத்திலிருந்து நீக்கிய விவேகச் செயல் பாராட்டுக்குரியது.

நல்ல பாடம் ஒன்று இதில் வெளியாகிறது. சுதந்திரக்கட்சியும் அமைச்சரவையும் ஒன்றுபட்டதும் முன்கூட்டிய காடையர் திட்டம் ஒன்று இல்லாததும் இந்த அமைதிக்கு வாய்ப்பாக இருந்தன.

எவ்வகையிலும் இந்தப் போரை நிறுத்துவதில் ஆர்வங்கொண்டவர் பிரதமர் பிரேமதாசா அவர்களே.

இன்றைய இக்கட்டான நிலையை நன்கறிந்தவரானதால் ''தீவிரவாதிகளைக் கொல்வதினால் பயங்கரவாதம் ஒழியாது'' என்று சொல்லியிருக்கிறார். இது பந்தோபஸ்து அமைச்சரின் 'போர்' முறைக்கு முற்றும் மாறுபட்டது.

'போர் நிறுத்தம்' இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியின் உதவியின்றி முடியாது என்பது பிரதமரின் உட்கருத்து. இதனை ஆழமாக ஆராய்ந்து செயற்படுவது இன்றியமையாதது.

எனவே, தாமதமின்றி பயங்கரவாதத் தலைவர்களை உட்படுத்தி இந்திய அரசுடன் பேசி நியாயமான முறையில் ஒரு போர் நிறுத்தம் ஏற்படுத்த தாமதித்தலாகாது

தி.மு.க பற்றியும், ரஷ்ய ஆயுதம் பற்றியும் புனைகதை பேசாது வேண்டுமானால்நட்பு நாடாகிய அமெரிக்காவின் ஒத்தாசையுடன் இன்றைய அழிவுநிலைக்கு தற்காலிகமான நிறுத்தமாவது காண வேண்டும்.

## இரு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள்

# பொதுத்தேர்தல் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்!

### இந்திரா மறைவின் பின் தொடர்ந்த கலவரங்களுக்கு சூத்திரதாரிகளாம்!

புதுடில்லி, நவம்பர் 25

**லோகசபை உறுப்பினர்களாக இருக்கும் இரு இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எதிர்வரும் இந்தியப் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இந்திராகாங்கிரஸ் கட்சியின் தலைமைப்பீடம் இவர்களை தேர்தலிலிருந்து நீக்கியுள்ளது.**

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவையடுத்து ஏற்பட்ட கலவரங்களுக்குப் பொறுப்பான சூத்திரதாரிகளில் இவ் இருவரும் அடங்குவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே பிரதமர் திரு. ரஜீவ்காந்தி இவர்களை பொதுத்தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலக்கும்படி தமது கட்சியினருக்கு உத்தரவிட்டார்.

இந்திராகாங்கிரஸ் கட்சியினரின் பொதுத்தேர்தல் வேட்பாளர் பட்டியல் தயாராகிவிட்டது. இதுவரை 430 பேர் இக்கட்சிச்சார்பில்வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

மேற்குறிப்பிட்டபடி போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ள இருஉறுப்பினர்களுடன் மேலும் 4 பேரின் பெயர்கள் இதுவரை போட்டியாளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

இதேவேளை மேலும் 66 வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்துவது பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பை இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் பிரதமர் ரஜீவிடம் விட்டுள்ளது.

இந்திராகாங்கிரஸ் வேட்பாளர்களில் 102 பேர் புதுடில்லியில் போட்டியிடுகின்றனர். 310 பேர் உத்தரப்பிரதேசம் 236 பேர் மத்தியபிரதேசம். 70 பேர் ஆந்திரா, 53 பேர் கேரளா.

இதுவரை 1500 பேர் லோகசபைத் தேர்தல் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்துள்ளனர். இன்னும் இருநாள் அவகாசம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய வழங்கப்பட்டுள்ளது. (கி)

### ''பேராசிரியர்கள், பட்டதாரிகள்

# தமிழர் வரலாறு குறித்து ஆய்வுகளை நடத்த வேண்டும்''

### அமைச்சர் 'இராசு' கருத்து

(கொழும்பு)

''எமது பட்டதாரிகள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் கடந்த காலம் குறித்து ஆய்வுகளை நடத்த முன்வராதமையினால் எமது வரலாறு இல்லாது போகின்றது. அண்மையில் திருகோணமலையில் கடலுக்கடியில் வெளிநாட்டிலிருந்து வந்த சுழியோடிகள் ஆய்வு நடத்தியபோது கடலுக்கடியில் ஆயிரம் அடிகளுக்குக் கீழ் எமது தமிழ் மன்னர் காலத்து மணித்தூண்களும் மற்றும் பல பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் புகைப்படங்களும பத்திரிகைகளில் வெளிவந்தன ஏனோ ஆய்வு இடையில் நிறுத்தப்பட்டு சுழியோடிகளும் சென்றுவிட்டனர். எதுஎவ்வாறிருப்பினும் வரலாற்று உண்மைகள் என்றோ வெளிவந்தேதீரும்.''

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை தமது அமைச்சில் இடம்பெற்ற 'திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள்' என்ற புத்தகவெளியீட்டில் உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'காங்கேசன்துறை முதல் காலி வரை- மட்டக்களப்பு முதல் முனீஸ்வரம்வரை நாடு முழுவதும் உள்ள இந்துக் கோவில்கள் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை அடுத்தாண்டு முற்பகுதியில் எனது அமைச்சு வெளியிடுகிறது.

''அகில உலக இந்து மகாநாட்டில் எடுக்கப்பட்ட வர்ணத்திரைப்பட மூலமும் அடுத்த ஜனவரியில் திரையிடப்பட இருக்கிறது

''இதுவரை வெளிவராத எமது வரலாறு பற்றிய குறிப்புக்களைப் பொதுமக்கள் எமக்குத் தந்துதவினால் அவற்றை நூலுருவில் வெளியிட ஆவன செய்வோம்'' என்றார்.

### புதன் இரவுக்குப்பின்னர்

# கொழும்பில் பாதுகாப்பு மிகத் தீவிரமாக அமுல்!

### எந்த ஒரு விஷமச்செயலையும் முறியடிக்கும் நிலையில் படைகள்!

[கொழும்பு]

சடந்த புதன்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் கொழும்பில் பல முக்கிய கேந்திரப் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக அமுல் செய்யப்பட்டன.

நாரஹென்பிட்டியவில் இரு கடைகள் சில விஷமிகளால் தீயிடப்பட்டன. ஆயினும் பாதுகாப்புப் படைகள் பூரண உஷார் நிலையில் கடமையிலீடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிசார் நகரில் பிரதான சந்திகள், வீதிகளில் ஆயுத பாணிகளாக நிறுத்தப்பட்டிருந்தனர் ஆயினும் இராணுவத்தினரே பெருமளவில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்கள் வாழும் இடங்கள் பலத்த பாதுகாப்புக்குட்பட்டிருந்தன ஊரடங்குச் சட்டம் முழு அளவில் அமுலாக்கப்பட்டது விசேட அனுமதி பெற்றவர்களே அவசர தேவைகளுக்காக வீதிகளில் சென்று திரிந்தனர்

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு 'ஏயர் லங்கா' உட்படப் பல விமான சேவை நிறுவனங்கள் கொழும்பிலுள்ள ஹோட்டல்களிலிருந்து தத்தமது பயணிகளை ஏற்றிச்சென்றன.

மேற்குறிப்பிட்ட இரு தீவைப்புச் சம்பவங்களை விட வேறு எந்தவொரு தீயசம்பவங்களும் இடம்பெறவில்லை. ஆனால் மக்களிடையே பீதியுடன் கூடிய பெரும் பதட்டம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

# காங்கேசன்ஊழியர் மத்தியில் 'பரபரப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர் அடிக்கடி ராணுவத்தினரால் கைது செய்யப்படுவதால் தொழிலாளர் மத்தியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் கடமை நேரத்தின் போதும் கடமை புரிந்து வீடு செல்லும் சந்தர்ப்பங்களிலும் தொழிற்சாலை ஊழியர்கள் ராணுவத்தினரால் கைதுசெய்ய பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவதால் தொழிலாளர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது

லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் காங்கேசன்துறை துறைமுகத்தை இரவுநேரத்தில் தமது பாதுகாப்பில் வைத்

(5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

# ஆசிரியர்களுக்கும் சேவைப் பதிவுப் புத்தகம்

(உடுவில்)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்று ஆசிரியர்களுக்கும் சேவைப்பதிவுப் புத்தகங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஆசிரியர்களின் ஒய்வூதியம் தாமதித்தே கொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் ஒய்வூதியப் பத்திரம் தயாரிப்பதற்கு ஆசிரியர்களின் சேவை விபரம்கிடையாமையேயாகும். ஆசிரியர்கள்சொந்தமாவட்டங்களுக்கு வெளியே சேவையாற்றியிருந்தால் அம்மாவட்டங்களிலிருந்து சேவை விபரங்களை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனை தவிர்ப்பதற்காகவே ஆசிரியர்களுக்கு சேவைப்பதிவுப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. 1-1-82க்கு முன்னர் நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு மண்ணிறத்திலும் 1-1-82க்குப் பின்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு சாம்பல் நிறத்திலும் பதிவுப் புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.

ஆசிரியர்களுக்கு தேவையான சேவைப் பதிவுப்புத்தகங்களை பாடசாலை அதிபர்கள் தமது வட்டாரக்கல்வி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை. மானிப்பாய் தொகுதிகளைச் சேர்ந்த சென். ஜோன் அம்புலன்ஸ் படைபிரிவுகளுக்கான வருடாந்த பரிசளிப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி கலந்து கொள்வார்.

முதலுதவிப் பயிற்சி பற்றி முதல் தடைவையாக தமிழ் மொழியில் எழுதப்பட்ட கைநூல் ஒன்று இவ்விழாவில் வெளியிடப்படவுள்ளது.

இந்த அணிவகுப்பு விழாவில் 34 கல்லூரிகளும் 120 தனிப்பட்ட பொதுநல நிறுவனங்களும் கலந்து கொள்கின்றன.

# நெடுந்தீவில் தனிநாயகம் அடிகளாருக்கு வெண்கலச் சிலை!

[வண்ணார்பண்ணை]

உலகத் தமிழறிஞர் தனிநாயகம் அடிகளாருக்கு பெரிய அளவிலான சிலையொன்றை அவரின் சொந்தக் கிராமமான நெடுந்தீவில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தெரிவித்தார்.

நெடுந்தீவில் உள்ள பொது ஸ்தாபனங்கள் அனைத்தும் இப் பணியில் பங்குபற்ற விரும்புவதாலும், இக்கிராமத்தில் சகல மக்களுக்கும் இந்தப் பணியில் பங்குபற்றச் சந்தர்ப்பம் கொடுக்கும்வகையில் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகச் சிலை அமைப்புக் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தனிநாயகம் அடிகளாரின் பெயரில் நெடுந்தீவில் கட்டப்பட்டு வரும் பொது நூல்நிலையத்தின் முன் இச்சிலையை நிறுவப் பொதுமக்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

தனி ஒருவரோ, எமது கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு ஸ்தாபனமோ இதுவிடயத்தில் ஈடுபடாது இக்கிராமப் பொது மக்கள் அனைவரும் இணைந்த சபையொன்றின்மூலம் பெரிய அளவிலான வெண்கலச் சிலையொன்றை அமைப்பதே இக் குழு அமைப்பின் நோக்கமாகும் என்றும், சிலை அமைக்கத் தடை என்று வெளியிடப்பட்ட செய்தி தவறானதென்றும் திரு. மகாலிங்கம் தெரிவித்தார்.

## சுழிபுரம் சுகாதார அபி. கழகத்தின் செயல் திட்டங்கள்

(சுழிபுரம்)

சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினர் சுழிபுரம் பகுதி தொழுநோயாளர்களுக்கு உதவும் நோக்குடன் நடாத்தப்படும் கொடித்தினம் அன்பளிப்பு நிதிமூலமாக சேகரிக்கப்படும் பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்ற திட்டத்தை தெரியப்படுத்தியுள்ளனர்.


சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி லியோக் கழக தொண்டர்கள் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினருடன் சேர்ந்து பணம் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கழகத்தினரின் 1984—1985ம் ஆண்டுக்குரிய செயல் திட்டங்கள் அச்சிட்டு விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. காட்டுப்புலத்தில் இயங்கும் பாலர் பாடசாலைக்கு வேண்டிய உபகரணங்கள் அளித்தல், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு வேதன ஒழுங்கைச் செய்து கொடுத்தல், உணவு, மருந்து வகைகளை வழங்குதல், குழந்தைகள் பராமரிப்பு நிலையம் நடாத்துதல், கிராம வாசிகளுக்கு ஏற்ற குடிசைத் தொழிலை ஏற்பாடு செய்தல், நோயாளர்களின் வீடுகளைத் திருத்தம் செய்து கொடுத்தல், மருந்து வகைகளை வழங்க தொண்டர்களை நியமித்து பயிற்சி அளித்தல், மாதிரிக் கிராமமாக இவ்விடத்தை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்யவுள்ளனர்.

## ஒத்திவைப்பு

(மானிப்பாய்)

காங்கேசன்துறை வட்டார பாடசாலை அதிபர்களுக்கு இன்று நடைபெற இருந்த கருத்தரங்கு காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி பொ. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.

## முதலிடம் பெற்றார்



[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி மாணவி செல்வி ப. சுஜாதா அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் பாலோதலில் 7—8 வகுப்புகளுக்கான பிரிவில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

யாழ். கல்வித்திணைக்களத்தினால் யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பண் இசைப்போட்டியிலும் முதலாமிடத்தைப் பெற்றுள்ள இவர், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு விரிவுரையாளர் திருமதி ப. ஞானம்பிகையின் புத்திரியாவர்.


# லக்ஸ்பிறே நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து இறக்குமதியாகும் பால்மா.




நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது

லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.

நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH

# இன்றைய பலன்

மாதம்: கார்த்திகை
திகதி: 11 (26-11-1984)
வாரம்: திங்கள்
திதி: சதுர்த்தி - பின்இரவு 1-18வரை

மேடம்: புதிய வழிகள்மூலம் பொருள்வரவுக்கு இடமுண்டு, சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடமேற்படலாம், குடும்பத்தில் இனிமை தவழும்.

இடபம்: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்குவழிகளில் இறங்கவேண்டாம். வீட்டில் சிறுபிணியும் தலைதூக்கும்.

மிதுனம்: போதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள், களத்திரவழியால்பொருட்கள் வந்து சேரும், ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதமொன்று கிடைக்கலாம்.

கடகம்: வாகனச் சாரதிகள் அவதானம் வேண்டும். பாதையில் பழுதுண்டு, பகைவர்கள் காத்திருப்பர்முன்னெச்சரிக்கை வேண்டும்.

சிங்கம்: பிதாவழி சுகக்குறைவும், பெரியோர் ஆதரவும் உண்டு, தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும்.

கன்னி: கடமையில் கவலைகள் தோன்றும், சிலர் கடன்படவும் நேரலாம், எவ்விடயத்திலும் பொறுமையைப் பேணவும்.

துலாம்: எண்ணம்போல் யாவும் நடக்கும், எதிர்பார்த்த விடயமொன்று மகிழ்ச்சியைத் தரும், மூத்த சகோதரத்தால் சஞ்சலமுண்டு

விருச்சிகம்: இன்று ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும், பிரயாணத்தின்போது பொருள்தவறக் கூடும்.

தனசு: தனக்குறைவு, மனச்சோர்வு, வணிகர்களாயின் இன்று பிரயாணத்தைப் பின்போடவும், உடல் நலக்குறைவுமுண்டாம்.

மகரம்: வரவிலும்மந்தநிலை, வாக்கு மாற்றம் சினேகிதவழியாலும் சிக்கல்கள் தோன்றக் கூடும், சிந்தித்து செயலாற்றவும்.

கும்பம்: சகோதரரின் உடல் நலம் பாதிக்கப்படும், முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டைதோன்றும்.

மீனம்: தாய்வழி சுகக்குறைவும், தனக்குறைவும் உண்டாம், வாகனச் சொந்தக்காரர்களுக்கு மந்தநிலை ஏற்படும்.

திருமதி
வே.ரவீந்திரன்

## எதிரி விடுதலை

(புலோலி)

மின்சார விநியோகக் கட்டணம் செலுத்தத்தவறினர் எனக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை நெல்லியடி உப-அலுவலகத்தால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை கந்தசாமி என்பவர் மின்சார விநியோகக் கட்டணம் 1324ரூபா 52சதத்தைக் கட்டத்தவறினர் எனக் குற்றஞ்சாட்டி இவ் வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. ஆர் ஸ்ரீ சிவாயா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரிசார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி திரு. வ மகாலிங்கம் இவ்வழக்கு பிழையான பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இவ் வழக்கை விசாரிப்பதற்கு இந் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கமில்லை எனவும் தெரிவித்து ஆட்சேபித்தார். சட்டத்தரணியின் ஆட்சேபத்தை ஏற்றுக்கொண்ட பதில்நீதவான் திரு ஸ்ரீசிவாயா எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினர்.

## முல்லை., கிளிநொச்சி

# பரீட்சைகள் 29-ல் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்பமாகவிருந்த சகல வகுப்புக்களுக்குரிய 1984-ம் ஆண்டு இறுதிப் பரீட்சை தற்போதைய காலநிலை காரணமாக இம்மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமையிலிருந்து முன்னரே அறிவிக்கப்பட்ட நேரசூசிகை ஒழுங்கில் நடைபெறும் என்று முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனும் எம். எம். மன்சூர் அறிவித்துள்ளார்.

இரு மாவட்டத்தைச்சேர்ந்த பாடசாலை அதிபர்களும் புதன்கிழமை தத்தமது வட்டாரக் கல்வி அதிகாரிகளிடமிருந்து வினாப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## ஊரடங்கு நீடித்தால்

# பாடசாலைகள் 11 மணிக்கு மூடப்படும்?

[யாழ்ப்பாணம்]

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து தினமும் 2மணிக்கு அமுல்செய்யப்படுமானல் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் நேரம் மாற்றம் செய்யப்படும் எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி இன்று திங்கட்கிழமை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களுடன் ஆலோசனை செய்வாரென்றும் கூறப்படுகிறது.

மாணவர்கள் ஊரடங்கு நேரத்திற்கு முன் தங்கள் வீடுகளுக்குச் செல்லும் வகையில் பாடசாலைகள் நண்பகல் 11 மணிக்கு மூடப்படலாம் என்று கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலை பஸ் சேவையும் நண்பகல் 12 மணிக்கு முன்னர் நடைபெறுமென்றும், இது பற்றி நாளை வ போ. ச. அதிகாரிகளுடன் பேசப்படுமென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## வேலாயுதம் பாடசாலை மாடிக்கட்டிடம் பூர்த்தி!

[புலோலி]

பருத்தித்துறை வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயத்தில் சுமார் 2,65,000ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள வகுப்பறைகளைக் கொண்ட மாடிக் கட்டிடத்தின் முதலாவது கட்ட வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

இவ்வித்தியாலய மாணவர்களின் வகுப்பறைகள் பற்றுக் குறையை நீக்குமுகமாக மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு முதல் கட்டத்திற்கென கடந்த வருடம் 1½ லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந் நிதியினுல் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதற்கட்டவேலைகள் பூர்த்தியடைந்துவருகின்றன.

இரண்டாம்கட்ட வேலைகளுக்கென இவ்வருடம் ரூ.1,15,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெகு விரைவில் இரண்டாம் கட்ட நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்படுமென வித்தியாலய அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன் தெரிவித்தார்.

## புலோலிப் பகுதியில்

# மலகூட சுத்திகரிப்பு முற்றாக நிறுத்தப்படும்!

(புலோலி)

யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலகப் பகுதியில் இவ்வருட இறுதியுடன் மலகூட சுத்திகரிப்பு வேலைகள் முழுமையாக நிறுத்திவைக்கப்படுமென யாழ். அபிவிருத்திச் சபை உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு, வ. வேலாயுதம் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்மாக அவர் விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இம்மலகூட சுத்திகரிப்பு வேலையைச் செய்பவர்கள் இந்தியப் பிரஜைகளாவர். இவர்களின் வாசகால உத்தரவு 1984ஆம் ஆண்டுடன் முடிவுறுவதனுல் அவர்கள் ஜனவரியுடன் இந்தியா செல்லவேண்டும். இலங்கைப் பிரஜைகள் எவரும் இத்தொழிலைச்செய்ய முன்வரமாட்டார்கள். சுகாதாரப் பாதுகாப்பு முறைக்குக் கூட வாளிமலகூடத்திலும் பார்க்க நீரடைப்பு மலகூடங்களே சிறந்ததாக இருக்கின்றது. எனவே சகல வீடுகளிலும் உள்ள வாளிமலகூடங்களை இவ்வருடப் பூர்த்திக்கு முன்னர் நீரடைப்பு மலகூடங்களாக மாற்றிக்கொள்ளவும்.

## எம். ஜி. ஆர் சுகமடைய விசேட பூசை

(புலோலி)

நவபாரதத்தின் தவப்புதல்வி பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையாரின் ஆத்மசாந்தி வேண்டியும், தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நல் ஆரோக்கியத்தினையும் நீண்ட ஆயுளையும் இறைஞ்சியும் சிங்கை நகர் உதயசூரியன்முன்னேற்ற மன்றசன சமூக நிலையத்தினர் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் விசேட பூசைகள் ஆராதனைகள் நடாத்தினர்.

## காங்கேசன்

(3ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

திருக்கும் ராணுவத்தினர் காங்கேசன் துறை சிமெந்து ஆலைக்கும் அடிக்கடி சென்று ரோந்து சுற்றி வருவதால் தொழிலாளர்கள் மத்தியில் பதட்டமான நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது



# வறுத்தலை விளான் சம்பவம்: ரூ. 11 லட்சம் நஷ்டம்

## அரச அதிபருக்கு புகார்

(ஏ. வி. மாணிக்கம்)

தெல்லிப்பழை வறுத்தலை விளானில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக அப்பகுதியில் பதினெரு வீடுகள் தீவைப்பு, கொள்ளை போன்றவற்றுக்கு இலக்கானதாக அரசாங்க அதிபருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

பதினெரு வீடுகளிலிருந்தும் பதினெருலட்சத்து 35 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வீடுகளின் உரிமையாளர்கள் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபருடாக யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் கட்டுவன் கிராமசேவையாளர் திரு. என். கதிரேசன் பாதிக்கப்பட்ட பதினெரு வீடுகளின் நஷ்ட விபரங்களைச் சேகரித்துள்ளார்.

வறுத்தலை விளான் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ட்ரக்குகளிலும் கவச வண்டிகளிலும் விரைந்துவந்த இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள பதினெரு வீடுகளில் பதினெரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுத்தியிருந்ததாக மகஜரில் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள் பாதிக்கப்பட்டவர்கள் அயல்கிராமங்களிலுள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

குறிப்பாக த. கந்தவனம் என்பவர் தமது மகஜரில்' வீடும் வீட்டிலிருந்த ஏனைய பொருட்களும் ஆயுதப்படையினரால் தீவைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளதால் சுமார் 2 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இப்பொழுது இருக்க வீடில்லாததால் குடும்பத்தினருடன் அயலவர் ஒருவரின் வீட்டில் வசிப்பதாகவும், உடுபிடவைகள், சமையல் பாத்திரங்கள் இன்றிக் கஷ்டப்படுவதாகவும் இதற்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

மற்றும் பாதிக்கப்பட்டோர் விபரம் வருமாறு:

வி எஸ். திருச்செல்வம் ரூ. 51,525, வி. பாஸ்கரலிங்கம் ரூ 5,000, சி. நாகமணி ரூ. 50,000 திருமதி ந. இரத்தினேஸ்வரி ரூ. 1 லட்சம் த. சின்னையா ரூ. 78,000, அ. செல்வமாணிக்கம் ரூ. 2,00,000 எஸ். செகராசசிங்கம் ரூ 78,000, கா. கந்தையா ரூ 22,000, இ. சின்னத்துரை ரூ 3,00,000.

மேலும் இப்பகுதியில் வசித்தோரில் அதிகமானேர் எந்த நேரமும் என்ன நடக்கலாம் என்ற பீதியினல் தூர உறவினர்களின் வீடுகளுக்கு தஞ்சம் கோரிச் சென்றுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற அன்று தொடக்கம் குடிபெயர்ந்து சென்றவர்களுக்கு அயல் கிராமங்களிலுள்ள பொதுமக்களும் பொதுஸ்தானங்களும் உணவு இருப்பிட வசதிகள் செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

கட்டுவன் மேற்குப்பகுதியிலிருந்து வெளியேறியிருந்த சுமார் 100 குடும்பங்களுக்கு ஏழாலைப்பகுதி மக்கள் சகல வசதிகளும் வழங்கியுள்ளனர்.

கடந்த 19-ம் திகதி இச்சம்பவங்கள் நடைபெற்றது தெரிந்ததே. (மா)

## மரண அறிவித்தல்

### செ. கனகசபாபதி

கொக்குவிலைச் சேர்ந்த செல்லத்துரை கனகசபாபதி 24-11-84 இரவு காலமானுர். இவர் கனக சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், க. தேவகுமார் (இத்தாலி) க. சிவகுமார், க சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், வ. சிவகுரு, சி பூமணி ஆகியோரின் மருமகனும், சி தேவரஞ்சினியின் மச்சானும் ஆவார். அன்னுரின் பூதவுடல் 26-11-84 மு. ப 10-30 மணிக்கு வளாகவீதி, திருநெல்வேலி தெற்கில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்ருர் உறவினர் சகலரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேம்.

மனைவி, பிள்ளைகள்.

869

## மரண அறிவித்தல்

### தி பரமநாதன்

கொழும்பு - துறைமுக அதிகாரசபையில் மேற்பார்வையாளராக கடமையாற்றிய திருவேங்கடம் பரமநாதன் காலமாகி விடடார் இவர் காலம் சென்ற திருவேங்கடம் பாக்கியலெக்ஷ்மி தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரனும், நாகேஸ்வரியின் அன்பு கணவரும், தில்லைநாதன், இராஜநாதன் (விலைமதிப்புகாரியாலயம் - யாழ்) பஞ்சநாதன் (யாழ்.மாநகரசபை மின்சாரப்பகுதி) ஆகியோரின் அன்பு தமையனுரும் ஜமுனு, காலம் சென்ற தேவிகா, திருச்செல்வம், சுரேஷ், ஜனுர்த்தனன், லெட்சுமி காந்தன் ஆகியோரின் அன்புதந்தையும் சண்முகராஜா (கணக்காளர்) சந்திரகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனுரும் அசுவத்தம்மா, தெய்வானை ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புமைத்துனரும் மதிவதனி சிவநேசன், சிவரூபன், தபேஸன், தவரதன், திலிபன், ஜெயகிருஷ்ணு, கண்ணதாசன் ஆகியோரின் பெரிய தகப்பனுரும் நிலாக்குமாரியின் பேரனுமாவார் அன்னுரின் ஈமைக்கிரியைகள் இன்று (26-11-84) அவரது இல்லத்திலிருந்து 8 மணிக்கு நடைபெற்று, கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்து செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

64 (404) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 870

## தீவிரவாதிகள்...

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி)

யுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தையோ, வன்முறையையோ இந்திய ஆதரிக்கவில்லையென்றும் அவர் கூறினுர்.

இலங்கைத்தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆதரவளித்து வருகிறதென்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டையும் அந்த அதிகாரி மறுத்துள்ளார். (வெ)

## ஊர் அடங்கிய...

(1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி)

யும் அவரின் இரு பிள்ளைகளையும் துப்பாக்கியைகாட்டி கைகளைத் தூக்கியபடி நிற்கவைத்து வீடுகளைச் சேதனையிட்டு அங்கு ஒரு அறையில் இருந்த சிறுதொகைப் பணத்தையும், நகைகளையும் எடுத்துச்செல்லவிருந்த நேரத்தில் கைக்குண்டையும் வீசினர் என்றும் அந்த நேரத்தில் பொலிஸ் உத்தியோகத்தரின் மகன் ஒருவர் திடீரெனப் பாய்ந்து, பணத்தை எடுத்துச் சென்ற நபரைக் கட்டிப்பிடித்தார் என்றும் உடனே மற்றவர்களும் சேர்ந்து அந்நபரை ஓட விடாது தடுத்தனர் என்றும் கூறப்பட்டது

இச்சமயம் கொள்ளையடிக்க கோஷ்டியாகவந்த ஏனையவர்கள் ஓடிவிட்டனராம்,

பிடிபட்ட நபர் அயலவர்களினுல் நன்ருக நையப்புடைக்கப்பட்டார்

பணம், நகைகள் தப்பித்தன.

இச்சம்பவம் முன்னுள் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. இலங்கையர் வீட்டிலேயே நேற்று முன்தினமிரவு நடந்தது.

## படகும், ஆயுதங்...

(1ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

பைகளிலிருந்து ஆயிரக்கணக்கான தோட்டாக்களும் மீட்கப்பட்டன.

இவைகள் பேப்பரினுல் பகுதி,பகுதியாக சுற்றப்பட்ட நிலையில் புத்தம் புதிய பெட்டிகளில் காணப்பட்டன.

இருபது டைனமைட் வெடிகளும் காணப்பட்டன. அத்தோடு இரண்டு பரல் பெற்ருேலும் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட இளைஞர் மேலும் படகுகளில் கோஷ்டியினர் வருவதாகத் தகவல் தெரிவித்தாகவும்' இதனையடுத்து நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் பாதுகாப்பு படைகள் அப்பகுதிகளில் ஆகாய மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டபோதிலும், வேறு எந்தவொரு படகுகளும் கைப்பற்றப்படவில்லையெனவும் பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது

இயந்திரப்படகும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் பொலிசாரினுல் நேற்றுக்காலை புகைப்படமெடுக்கப்பட்டது.

அடையாளம் காணப்படாத இந்த மூன்று இளைஞர்களின் சடலங்களும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நேற்று பிரேத பரிசோதனை செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பிரேத பரிசோதனை நடைபெறவில்லை இன்று பிரேத பரிசோதனை நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படகில் 10 பேர் வந்ததாகவும் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் ஏனையோர் கடலில் குதித்து தப்பிவிட்டதாகவும் பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

## மூதூர் பொலிஸ்நிலைய கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

மூதூர் பொலிஸ் நிலையத்தில் இருபொலிசாருக்கிடையே இடம்பெற்ற வாக்குவாதத்தையடுத்து, துப்பாக்கிச் சூட்டினுல் காயமடைந்த கான்ஸ்டபிள் அபயரத்ன 30 வயது' திருகோணமலை ஆஸ்பத்திரியில் மரணமானுர்.

இது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட மூதூர் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் பியசிறி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான மரண விசாரணையை திருகோணமலை பதில் நீதவான் எம். கே. செல்வராஜா நடத்தி,கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# தாமதித்து வந்த யாழ்தேவி ரயில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட யாழ். தேவி ரயில், வழக்கமான நேரத்தை விட தாமதித்தே யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்து சேர்ந்தது.

வழக்கம் போல, இராணுவத்தினர் கவசவண்டிகள் சகிதம் யாழ். புகையிரத நிலையத்துக்கு பாதுகாப்பளிப்பதற்காக பிற்பகல் 2 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

நேற்று ஊரடங்குச் சட்டம் 2 மணி தொடக்கம் என்று காலையில் வானெலிமூலம் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து யாழ் நகரின் மற்றும் பிரதான இடங்களில் நண்பகல் 12 மணிதொடக்கம் பொதுசன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

திடீரென நேற்றுப் பிற்பகல் 4 மணி தொடக்கம் வடபகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஒருசில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன.

பிற்பகல் 3-15 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தை வந்து சேர்ந்த யாழ். தேவி ரயில் 4 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

யாழ். புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற வ. பி. போ, வ. சபையைச் சேர்ந்த 5 பஸ்கள் பிரயாணிகளை ஏற்றிச் சென்றன. (மா)

## ஊரடங்கு சட்ட...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி

இந்து மகளிர் சந்தியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்ததாகவும் அவ்வழியால் வந்த இராணுவத்தினரைக் கண்டதும் சைக்கிளை போட்டுவிட்டு ஓடியபோது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இவர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இவர் தற்போது யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிருர்.

இதேவேளை இராணுவத்தினர் பலாலி வீதியால் சென்றபோது ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் வந்ததாகவும் இராணுவத்தினர் பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதும் அவர்கள் தப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது

### வசாவிளானில் இளைஞருக்கு சூடு

ஊரடங்கு சட்ட நேரத்தில் நேற்று வசாவிளான் பகுதியில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுடப்பட்டு காயமடைந்துள்ளார்

இவருக்கு வயிற்றில் காயமேற்பட்டதாக கூறப்படுகிறது. இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குரும்பசிட்டி புன்னலைக் கட்டுவன் பகுதிகளிலும் துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

## சுவரொட்டி...

(1-ம் பக்கம்5கலத்தொடர்ச்சி)

'சாவகச்சேரித் தாக்குதலுக்கு நாம் உரிமை கோருகிறேம் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் 'லலித்' கூறியிருப்பது, இயங்கங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாம்' என்று அச்சுவரொட்டியில் எழுதப்பட்டுள்ளது. (மா)

## கொழும்பில் 11 இளைஞர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் வீதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதி ஒன்றில் தங்கியிருந்த 11 தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் மன்னுர் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள்.

இதேவேளை ஊரடங்குச் சட்டநேரத்தில் கொட்டாஞ்சேனை வீதியில் நடமாடிய குருநகர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆறு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜோசேப் இம்மானுவேல்' ஜோசேப் அன்ரனிப்பிள்ளை, நீக்கிலாபிள்ளை அருள்பிரகாசம், இராயப்பு அன்ரனிதாஸ், பெர்னுண்டோ ஜோசப், லூசியன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் இன்று காலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வழமைபோல் 'இன்ரசிற்றி' சேவை!

[யாழ்ப்பாணம்]

இன்று திங்கட்கிழமை முதல் கொழும்பு - யாழ்ப்பாணம் 'இன்ரசிற்றி' புகையிரதசேவை சீராக நடைபெறும்.

வழமைபோல திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களிலேயே இச்சேவை நடைபெறும்.

கொழும்பு கோட்டையிலிருந்து காலை 5-45 மணிக்கு 'இன்ரசிற்றி' புறப்பட்டு நண்பகல் 11-55 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும் பின்னர் பிற்பகல் 1 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இரவு 7-10 மணிக்கு கொழும்பு கோட்டையை இது சென்றடையும்.

கடந்த சில தினங்களாக நிலவிய பதற்ற நிலைமை காரணமாக இந்தரயில் சேவை சீர்குலைந்திருந்தது. (கி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.